**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.43/2025 - PW-4**

| | |
|---|---|
| Name | திருமதி. செவ்வந்தி |
| Husband/Father Name | லோகேஷ் |
| Village /Area | கார்வேடு நகரம், ஆந்திரா |
| Taluk | சித்தூர் |
| Occupation | இல்லத்தரசி |
| Age | 29 |
| Religion | இந்து |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 14.08.2025.

**(எதிரிகள் ஆஜர் ).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். அசா.1 எனது அம்மா முறை. இறந்த விக்னேஷ் எனது தம்பி, ஆஜர் இரண்டாம் எதிரி தம்பி மனைவி, ஆஜர் முதல் எதிரி எனது சித்தியின் மகன் ஆவார்கள். 03.09.2023 அன்று இரவு எனது தம்பி 8 மணி வரை என்னுடன் வெகு நேரம் கைப்பேசியில் பேசிக்கொண்டிருந்தார். ஆஜர் 2 வது எதிரியும் அப்போது கைப்பேசியில் பேசினார். மறுநாள் காலை 07.00 மணியளவில் எனது தம்பி விக்னேஷ் இறந்து விட்டதாகவும் யாரோ வெட்டி கொலை செய்யப்பட்டதாகவும் எனது சகோதரர் தமிழ்செல்வன் தொலைபேசியில் தகவல் தெரிவித்தார். அதன் பிறகு நான் எனது தாய் வீட்டிற்கு வந்த பிறகு எனது தம்பி மனைவிக்கும் முதல் எதிரிக்கும் தவறான உறவு முறை இருந்தது என்றும் அதனால் திட்டமிட்டு இருவரும் எனது தம்பியை கொலை செய்துவிட்டதாகவும் தகவல் தெரிந்துக்கொண்டேன். இது சம்பந்தமாக எனது தாயார் ரேணுகா

என்பவர் காவல் நிலையத்தல் புகார் அளித்ததின் பேரில் போலீசார் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**<u>எதிரிகள்  தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**   இல்லை

**(ஒம்./–) திருமதி.கே.எஸ்.ஜெயமங்களம்,**
**இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**அரக்கோணம்.**